# அவசரக்கூட்டம்

**பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் அவசரக்கூட்டம் 2021 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திரு.ஜெ.விநாயகம், பிஎஸ்சி., அவர்கள்**
**தனிஅலுவலர்/ ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

## பொருள் : 01

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14000/2021/இ1 நாள்.09.09.2021ல் கோரியுள்ளபடி பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஏற்படுத்தியுள்ள மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் புதிதாக தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணிக்காக ரூ.100.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெரும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பி மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:1479/2021/இ1)

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காண் பணிக்குத் தேவைப்படும் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

## பொருள் : 02

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பகுதியில் மண்சாலைகளை தார்சாலையாக அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்கு ரூ.127.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:—

| வ. எ | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | பல்லடம் நகராட்சி வார்டு எண்:02 சேடபாளையம் குமரன் கார்டன் பகுதியில் உள்ள மண்சாலைகளை தார்சாலையாக மாற்றுதல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 0.486 | 123.00 |
| 2 | பல்லடம் நகராட்சி வார்டு எண்:11 காளியப்பா நகர் பகுதியில் உள்ள மண்சாலைகளை தார்சாலையாக மாற்றுதல் | 0.032 | 4.00 |
| | **மொத்தம்** | **0.518** | **127.00** |

எனவே, பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மண் சாலைகளை தார் சாலையாக மாற்றுதல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் பணிக்காக ரூ.127.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெரும் பொருட்டு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்ட

அறிக்கையினை நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் அலுவலகத்திற்கு அனுப்பி மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்:1482/2021/இ1)

<u>**அலுவலகக் குறிப்பு :**</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காண் பணிக்குத் தேவைப்படும் தொகையினை அரசிடமிருந்து முழு மானியமாக பெற்று மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தனிஅலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

# சாதாரணக்கூட்டம்

**பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திரு.ஜெ.விநாயகம், பிஎஸ்சி., அவர்கள்**
**தனிஅலுவலர்/ ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**

**பொருள் : 01**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுவினால் பரவும் பிற காய்ச்சல்களை தடுக்கும் விதமாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ஒ.மு.எண்.13433/2018/ஜே1, நாள்.17.09.2018ன்படி, 300 வீடுகளுக்கு ஒரு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர் (Domestic Breed Checker) என்ற விகிதத்தில் இந்நகராட்சியில் உள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் 55 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை வெளிக்கொணர்வு அடிப்படையில் ஆண்டு முழுவதும் அமர்த்தி கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அவ்வகையில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கடந்த 02.07.2020 முதல் 30.06.2021 வரை திருவாளர்.துரை அன்கோ, ஜெயங்கொண்டம் என்ற நிறுவனத்தின் மூலம் வெளிக்கொணர்வு அடிப்படையில் இப்பணி திறம்பட மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கொரோனா பெருந்தொற்று காரணமாக ஒப்பந்தப்புள்ளிகள் கோர இயலாத நிலையில் கொசு ஒழிப்பு மற்றும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள ஏதுவாக மன்றத்தின் அனுமதி பெற்று இப்பணியினை செய்து வரும் திருவாளர்.துரை அன்ட் கோ என்ற நிறுவனத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் அதே விலை விகிதத்தில் 01.07.2021 முதல் 30.09.2021 வரை மூன்று மாத காலத்திற்கு தற்காலிகமாக கால நீட்டிப்பு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி, கால நீட்டிப்பு காலமானது 30.09.2021 உடன் முடிவடையவுள்ள நிலையில், 14.09.2021 அன்று நடைபெற்ற காணொளி கலந்தாய்வு கூட்டத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் வெவ்வேறு நகராட்சிகளில் வெவ்வேறு விதமான விலைப்புள்ளி அடிப்படையில் வெளிக்கொணர்வு (Outsourcing) ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், மாநிலம் முழுவதும் அனைத்து நகராட்சிகளிலும் ஒரே மாதிரியான விலைப்புள்ளி மற்றும் அந்தந்த நகராட்சியின் மக்கள் தொகை/ குடியிருப்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்படும் ஆளிநர்களின் எண்ணிக்கையையும் நிர்ணயம் செய்ய உள்ளதாகவும், அதுவரை வெளிக்கொணர்வு (Outsourcing) ஒப்பந்தங்கள் கோருவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறும் ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்கள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தால் வெளியிட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோருமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

இந்நிலையில், கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களுக்கான வெளிக்கொணர்வு ஒப்பந்த நீட்டிப்பு காலம் 30.09.2021 உடன் முடிவடைவதாலும், புதிய வழிகாட்டுதல்கள் பெறப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி புதிய வெளிக்கொணர்வு ஒப்பந்ததாரரை நிர்ணயம் செய்ய குறைந்தபட்சம் மூன்று மாத காலங்கள் தேவைப்படும் என்பதானாலும், எதிர்வரும் வடகிழக்கு

பருவமழை காலத்தில் டெங்கு மற்றும் கொசுவினால் பரவக்கூடிய பிற காய்ச்சல்கள் ஏற்படும் அச்சுறுத்தல் உள்ளதால் இதனை திறம்பட எதிர்கொள்ள ஏதுவாக பொது சுகாதார அவசர அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொசு ஒழிப்பு பணிகளை தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள ஒப்பந்த நிபந்தனைகள் மற்றும் அதே விலை விகிதத்தில் தற்போது வெளிக்கொணர்வு அடிப்படையில் பணியாளர்களை வழங்கி இப்பணியினை செய்து வரும் திருவாளர்.துரை அன்ட் கோ என்ற நிறுவனத்தின் இசைவினை பெற்று **01.10.2021** முதல் **31.12.2021** வரை மூன்று மாதத்திற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினத்தொகை ரூ.**25.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**1.**அனுமதிக்கலாம்.

**2.**பொது சுகாதார அவசர அவசியம் கருதி ஏற்கனவே மேற்கண்ட பணிகளுக்கு வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை வழங்கி வரும் துரை அன்ட் கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு **01.10.2021** முதல் **31.12.2021** முடிய மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கவும், அதற்காகும் செலவினத் தொகையை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.**478/2020**/எச்**1**)

## <u>பொருள் : 02</u>

வடகிழக்கு பருவமழை துவங்க உள்ளதை முன்னிட்டு அனைத்து துறை அரசு கட்டிடங்கள், பள்ளி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தவும், ஏற்கனவே உள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டிகளை சுத்தம் செய்து பராமரிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் , திருப்பூர் அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்லடம் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களான நகராட்சி அலுவலகம், பேருந்து நிலையம், பேருந்து நிலைய வணிக வளாக கடைகள், அம்மா உணவகம், NGR சாலை வணிக வளாகம் கடை, தினசரி மார்க்கெட் கடைகள், வாரச்சந்தை கடைகள், மங்கலம் சாலை வணிக கடை மற்றும் ஆண்டாள் நகர் ஆகிய **9** இடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், பல்லடம் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் இருந்த **9** பள்ளிகள் (தொடக்கப்பள்ளி–**4**, நடுநிலைப்பள்ளி–**5**) பல்லடம் நகராட்சி வசம் தற்சமயம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட **9** பள்ளிகளை நேராய்வு செய்யப்பட்டதில், **8** பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாமல் உள்ளது கண்டறியப்பட்டது. எனவே, **8** நகராட்சி பள்ளிகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் ஏற்படுத்த ரூ.**4.90** இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து தொண்ணூராயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண் : **1342/2021**/இ**1**)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் **2021–2022** ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

## <u>பொருள் : 03</u>

பல்லடம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தி வரும் வாகனம் எண் : TN42 AE 8625 க்கான ஸ்டெரிங் பாக்ஸ் செக்கப், ஸ்டெரிங் பம்ப் செக்கப், மற்றும் சிறு, சிறு பழுதுகளை சரிசெய்வதற்கு கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/S ஏ.பி.டி இன்டஸ்டிரீஸ் லிமிடெட், 9/16 , பொள்ளாச்சி மெயின் ரோடு, பல்லடம் – 641 664. | 23977 |
| 2 | M/s மெசர்ஸ் மேட்டுபாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், போயம்பாளையம் பிரிவு சௌத், பி.என்.ரோடு, திருப்பூர். | 26300 |
| 3 | M/S சம்பத் ஆட்டோ கேரேஜ், லட்சுமி விநாயகர் நகர், மருதமலை மெயின் ரோடு, பி.என்.புதூர், மருதமலை. | 30650 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள M/S ஏ.பி.டி இன்டஸ்டிரீஸ் லிமிடெட், 9/16 , பொள்ளாச்சி மெயின் ரோடு, பல்லடம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்காகும் செலவின தொகை வழங்கவும், மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/S ஏ.பி.டி இன்டஸ்டிரீஸ் லிமிடெட், 9/16, பொள்ளாச்சி மெயின் ரோடு, பல்லடம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கவும், அதற்கான செலவினத்தொகை மற்றும் பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

## <u>பொருள் : 04</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:07 ல் உள்ள செங்குட்டை பகுதியில் புதியதாக இரண்டு பொதுக்குழாய்கள் அமைத்து தரக் கோரி பொதுமக்களிடமிருந்து விண்ணப்பம் வரப்பெற்றதன் அடிப்படையில் மேற்கண்ட இடமானது நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட செங்குட்டை பகுதியில் 54 வீடுகள் உள்ளன. மேலும், மேற்கண்ட வீடுகளுக்கு ஒரேயொரு பொதுக்குழாய் மட்டும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளது., இதனால் மேற்கண்ட பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, இரண்டு இடங்களில் புதியதாக பொதுக்குழாய் அமைத்தால் தான் அப்பகுதி பொதுமக்களின் குடிநீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இயலும். எனவே, செங்குட்டை பகுதியில் இரண்டு பொதுக்குழாய் அமைக்கும் பணிக்கு ரூ.23,000/– க்கு (ரூபாய் இருபத்து மூன்றாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு தனி அலுவலர் அவர்களால் 27.08.2021 தேதி அன்று முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட பணியானது குடிநீர் பணி என்பதாலும், பணியின் அவசர அவசியம் கருதியும் மேற்காண் பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.வி.சுப்பிரமணியம் அவர்கள் மூலம் ஒப்படைப்பு பணியாக பணி உத்தர வழங்க பணியினை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் : 1499 /2021/இ1)

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2021–2022 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளலாம்.

**தனிஅலுவலர்/**
**ஆணையாளர்**
**பல்லடம் நகராட்சி**